C.C 24/12

PW 2

பெயர் சோமசுந்தரபாண்டியன்

தேதி 07.01.2019

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு 1ம் எதிரி தரப்பில் கு.வி:

புகாரில் உள்ள சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். யாரால் எந்த தேதியில் எப்போது வழுங்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. மதுரை மண்டல அலுவலகத்தில் இருந்து வந்த கடிதம் மற்றும் அதில் உள்ள புகைப்படம் கொடுத்து என்னை விசாரித்த காவல் ஆய்வாளரிடம் நான் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். ராஜா என்பவரை நான் எந்த தேதியில் விசாரித்தேன் என போலிசாரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். ராஜாவிடம் இருந்து தனிபட்ட முறையில் நான் வாக்குமூலம் மற்றும் புகார் வாங்கவில்லை என்றால் சரிதான். நான் விசாரித்த ராஜாவிடம் வேறு ஒருநபரின் புகைப்படம் ஒட்டபட்டதை காண்பித்து நான் அவரிடம் வாக்குமூலம் மற்றும் புகார் வாங்கவில்லை என்றால் சரிதான். என் பள்ளியில் இருந்து மதிப்பெண் பட்டியல் மற்றும் டிசியில் புகைப்படம் வராது என்றால் அந்த சமயத்தில் எதுவும் வராது. எங்கள் பள்ளி ஆவணங்களிலும் எங்களிடம் படித்த பள்ளி மாணவர்களின் புகைப்படம் இல்லை என்றால் சரிதான். மண்டல அலுவலகத்தில் இருந்து வந்த ஆவணத்தில் போட்டோ ஒட்டியது வேறு ஒரு நபரின் புகைப்படம் என நான் போலிசாரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் அசாஆ5கால்டிக்கெட் கம்பம் பள்ளியில் கொடுத்ததாக தான் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் அசாஆ6மதிப்பெண் எங்கள் பள்ளியில் இருந்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் அசாஆ7 மார்க்சீட் எங்கள் பள்ளியில் இருந்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். வேறு படம் ஒட்டபட்டதாக நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் மேல் அதிகாரியின் வேண்டுகோளுகிணங்க நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. சீலையம்பட்டியில் வடக்கில் இருந்து தெற்கில் வரும் பேருந்தை ரோட்டின் இடதுபுறமாகவும் , தெற்கில் இருந்து வடக்கில் வரும் பேருந்தை ரோட்டின் வலது புறமாக நிறுத்த பேருந்து நிறுத்தும் வசதி உள்ளது என்றால் சரிதான்.